## 2.6 2000–01 – ஒவ்வொரு தொகுதிக்கும் ரூ.77.00 இலட்சம் ஒதுக்கீடு மற்றும் கூடுதல் வழிகாட்டி நெறிமுறைகள்

ஊரக வளர்ச்சி (மதி1) துறை

அரசாணை (நிலை) எண்.138 நாள் : 25.05.2000

படிக்க:

1. ஊரக வளர்ச்சி (மதி1) துறையின் கடித(நிலை) எண்.263/நாள்.15.12.98
2. ஊரக வளர்ச்சி (மதி1) துறையின் அரசாணை நிலை எண்.75/நாள்.15.04.1999
3. ஊரக வளர்ச்சி (மதி1) துறையின் அரசாணை நிலை எண்.80/நாள்.29.04.1999
4. ஊரக வளர்ச்சி (மதி1) துறையின் அரசாணை நிலை எண்.123/நாள்.07.07.1999
5. ஊரக வளர்ச்சி இயக்குநரின் நேர்முகக் கடித எண்.33164/2000/திஅ5/ நாள்.07.04.2000

**ஆணை**

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தை 1999–2000ம் ஆண்டில் செயல்படுத்துவது தொடர்பாக பார்வை 2 மற்றும் 3ல் குறிப்பிடப்பட்டுள்ள ஆணைகளில் ஆணை வெளியிடப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், 2000–2001ம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் ஒரு சட்டமன்ற உறுப்பினர் தொகுதிக்கான நிதி ரூ.77 இலட்சம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பிற்கிணங்க ஒவ்வொரு தொகுதிக்கும் ரூ.77 இலட்சம் 2000–2001ம் நிதியாண்டில் இத்திட்ட செயலாக்கத்திற்காக அளிக்கப்படும்.

2. ஊரக வளர்ச்சி இயக்குநரிடம் 2000–2001ம் ஆண்டிற்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வழிகாட்டி நெறிமுறைகளை வெளியிடுவற்கு கருத்துரு கோரப்பட்டது. பார்வை 5ல் குறிப்பிடப்பட்டுள்ள கடிதத்தில் ஊரக வளர்ச்சி இயக்குநரால் அனுப்பப்பட்ட கருத்துரு, அரசால் கவனமாக பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்ட மாற்றங்களுடன் வழிகாட்டி நெறிமுறைகள் தவறாமல் பின்பற்றுவதற்காக வெளியிடப்படுகிறது.

(1) இத்திட்டத்திற்காக 2000–2001ம் ஆண்டில் ஒதுக்கப்பட்டுள்ள நிதியான ரூ.77 இலட்சத்தில் (ரூபாய் எழுபத்து ஏழு இலட்சம் மட்டும்) முதல் தவணையாக (50 சதவிகிதம்) அதாவது 38.5 இலட்சம் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மாவட்டங்களுக்கு விடுவிக்கப்படுகிறது. இந்த நிதி அரசாணை நிலை எண்.737, நிதி (வழிவகை)துறை,நாள்.28.12.1998ல் குறிப்பிடப்பட்டுள்ள கணக்கு தலைப்புகளில் வரவு வைக்கப்பட்டு, பிறகு தேவைக்கேற்ப ஊரக வளர்ச்சி இயக்குநரால் விடுவிக்கப்பட வேண்டும் என்று ஆணையிடப்படுகிறது. மேலும், இவ்வாறு மாவட்டங்களுக்கு விடுவிப்பதற்கு ஊரக வளர்ச்சிஇயக்குநருக்கு அரசுஅதிகாரம் அளிக்கிறது.

(2) மீதமுள்ள 50 சதவிகித இறுதித் தொகையைஅதாவது ரூ.38.5 இலட்சத்தை விடுவிக்க தற்போது விடுவிக்கப்பட்ட 50 சதவிகிதத் தொகையில் 60 சதவிகிதத் தொகை செலவான மாவட்டங்களுக்கு, அதற்கான கணக்கு பட்டியலுடன் நிதித் துறையின் இசைவினைப் பெற்ற பின்பே ஊரக வளர்ச்சி இயக்குநர் விடுவிக்க வேண்டும் என்று ஆணையிடப்படுகிறது. இத்திட்டத்தில் தற்போது ஒதுக்கப்பட்டுள்ள ரூ.117.5 கோடிக்குகூடுதலாகத் தேவைப்படும் தொகையை துணை மானியக் கோரிக்கையில் சேர்க்க நிதித்துறைக்கு கருத்துரு அனுப்பும்படி ஊரக வளர்ச்சி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(3) மேலும், பார்வை இரண்டில் குறிப்பிடப்பட்டுள்ள அரசாணையில்1999–2000ம் ஆண்டில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட செயலாக்கத்திற்காக வெளியிடப்பட்ட வழிகாட்டி நெறிமுறைகளில் பத்தி 6ல் குறிப்பிடப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடும், தேர்வும் கீழ்கண்ட மாற்றங்களுடன் 2000–2001ம் ஆண்டில் பின்பற்றப்பட வேண்டும். ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும்.

(அ) கணினி பாடத்திட்டத்தின் முக்கியத்துவத்தைக் கருத்திற்கொண்டு, அவரது தொகுதியில் உயர்நிலை மற்றும்மேல்நிலைப் பள்ளிகளில் இதற்கான வசதிகளுக்காக மூன்று பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதற்காக ரூ.12 இலட்சம் (ரூபாய் பன்னிரண்டு இலட்சம் மட்டும்) (ரூ.4 இலட்சம் 3 கட்டடங்கள்) ஒதுக்க வேண்டும்.

(ஆ) ரூ.20 இலட்சம் (ரூபாய் இருபது இலட்சம் மட்டும் ) தார்சாலைகள் அமைப்பதற்காக ஒதுக்க வேண்டும்.

(இ) ரூ.20 இலட்சம் (ரூபாய் இருபது இலட்சம் மட்டும்) கான்கிரீட் தெருக்கள் மற்றும் சந்துக்களுக்கான பணிகளுக்காக ஒதுக்க வேண்டும்.

(ஈ) ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் அவரது தொகுதியில் மேற்குறிப்பிடப்பட்டுள்ள ரூ.52 இலட்சம் அன்றி, மீதியுள்ள நிதியான ரூ.25 இலட்சத்தை (ரூபாய் இருபத்து ஐந்து இலட்சம் மட்டும்) மேற்கண்ட பணிகளுக்காகவோ அல்லது வேறு தடைசெய்யப்படாத பணிகளுக்காகவோ அவர் விரும்பும்படி பரிந்துரைக்கலாம்.

(உ) 2000–2001ம் ஆண்டில் அரசுப் பள்ளிகளுக்கு தளவாடங்கள் மற்றும் கணினிகள் ஊராட்சி ஒன்றிய / தாலுக்கா அலுவலகங்களுக்கு கணினி வாங்குதல் தகுதி பெற்ற பணிகளாகும்.

(ஊ) பள்ளிக்கூட கட்டிடங்கள் கட்டுவது சம்பந்தப்பட்ட தொகுதிக்கு தேவையில்லை என்றால் அதை தார் சாலைகள் அல்லது கான்கிரீட் தெருக்கள் மேம்படுத்துவதற்கு ஒதுக்கலாம். சம்பந்தப்பட்ட தொகுதியில், தார்சாலைகள் அமைக்க வேண்டிய அவசியம் இல்லையென்றால், அந்த நிதியை கான்கிரீட் தெருக்கள் அமைக்கப் பயன்படுத்தலாம்.

(எ) பார்வை இரண்டில் குறிப்பிட்டிருக்கும் அரசாணையில் இணைப்பு–IIல் தடைசெய்யப்பட்ட பணிகளில் கீழ்க்கண்டவை வரிசை எண்.9ற்குப் பின் சேர்க்கப்படவேண்டும். இந்த திருத்தப் பட்டியல் ஆணையின் இணைப்பு–II ல் கொடுக்கப்பட்டுள்ளது.

10. பேருந்து நிழற்குடை

11. சமுதாயக்கூடம்.

12. கலையரங்கம் / நாடகமேடை.

13. கான்கிரீட் சாக்கடைகள் (Road Side Concrete Drains)

3. இத்திட்டத்தின் கீழ் பணிகளை சம்பந்தப்பட்ட தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தேர்வு செய்து எழுத்து மூலமாக சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட சட்டமன்ற தொகுதிகளுக்கு சென்னை மாநகராட்சி ஆணையரிடமும் மற்ற அனைத்து மாவட்டங்களில் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமும் தெரிவிக்க வேண்டும் எனவும் ஆணையிடப்படுகிறது.

4. காலஅட்டவணை

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பணிகளை நிறைவேற்றுவதற்கு கீழ்கண்ட கால அட்டவணை பின்பற்றப்படவேண்டும்.

| வ. எண் | நடவடிக்கைகள் | குறிப்பிட்ட தேதியிலோ அல்லது அதற்கு முன்போ |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களால் இறுதியான பணிகளின் பட்டியல் சென்னை மாநகராட்சி ஆணையருக்கோ அல்லது மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கோ அளிக்கப்பட வேண்டிய நாள் | 15.06.2000 |
| 2. | நிர்வாக மற்றும் தொழில்நுட்ப ஒப்பளிப்பு அளிக்கப்பட வேண்டிய நாள் | 15.07.2000 |
| 3. | பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளிகள் இறுதியாக்கப்பட வேண்டிய நாள் | 15.08.2000 |
| 4. | பணிகள்துவக்கப்படவேண்டிய நாள் | 30.08.2000 |
| 5. | பணிகள் முழுமையாக முடிக்கப்பட வேண்டிய நாள் | 31.12.2000 |

5. முன்பத்தி 2(1)ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினமான ரூ.77 இலட்சம் (ரூபாய் எழுபத்து ஏழு இலட்சம் மட்டும் ) கீழ்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்.

"2515–00– ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டங்கள்–800 ஏனைய செலவு – ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள்–II–மாநில திட்டம் – JV –சட்டமன்ற உறுப்பினர் தொகுதி

மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஏனைய திட்டங்கள் செயல்படுத்துதல்–09–உதவி மானியங்கள்
(த.தொ.கு.2515 00 800 JV 0927)"

**6.** இந்த ஆணை நிதித்துறையின் அ.சா.எண்.1594/FS(P)/2000/ நாள்.23.05.2000ன் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்

**2. MLACDS**

இணைப்பு–1

ஊரக வளர்ச்சித்துறையின் அரசாணை (நிலை) எண்.138 /ஊரக வளர்ச்சி (மதி1) துறை நாள்.25.05.2000.
சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்.2000–2001ம் ஆண்டு

| வ.எண். | மாவட்டத்தின் பெயர் | மொத்த சட்டமன்றத் தொகுதிகள் | மாவட்டத்திற்காக ஒதுக்கப்படும் மொத்த நிதி (ரூ.இலட்சத்தில்) | மாவட்டத்திற்காக ஒதுக்கப்படும் மொத்த நிதியில் விடுவிக்கப்படும் முதல் தவணை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1. | சென்னை (நியமிக்கப்பட்ட ஒரு சட்டமன்ற உறுப்பினரையும் சேர்த்து) | 15 (14+1) | 1155 | 577.50 |
| 2. | காஞ்சிபுரம் | 9 | 693 | 346.50 |
| 3. | திருவள்ளூர் | 8 | 616 | 308.00 |
| 4. | கடலூர் | 9 | 693 | 346.50 |
| 5. | விழுப்புரம் | 12 | 924 | 462.00 |
| 6. | வேலூர் | 12 | 924 | 462.00 |
| 7. | திருவண்ணாமலை | 9 | 693 | 346.50 |
| 8. | சேலம் | 12 | 924 | 462.00 |
| 9. | நாமக்கல் | 5 | 385 | 192.50 |
| 10. | தர்மபுரி | 10 | 770 | 385.00 |
| 11. | ஈரோடு | 11 | 847 | 423.50 |
| 12. | கோயம்புத்தூர் | 14 | 1078 | 539.00 |
| 13. | நீலகிரி | 3 | 231 | 115.50 |
| 14. | தஞ்சாவூர் | 9 | 693 | 346.50 |
| 15. | நாகப்பட்டினம் | 6 | 462 | 231.00 |
| 16. | திருவாரூர் | 5 | 385 | 192.50 |
| 17. | திருச்சிராப்பள்ளி | 9 | 693 | 346.50 |
| 18. | கரூர் | 4 | 308 | 154.00 |
| 19. | பெரம்பலூர் | 5 | 385 | 192.50 |
| 20. | புதுக்கோட்டை | 5 | 385 | 192.50 |
| 21. | மதுரை | 10 | 770 | 385.00 |
| 22. | தேனி | 5 | 385 | 192.50 |
| 23. | திண்டுக்கல் | 7 | 539 | 269.50 |
| 24. | இராமநாதபுரம் | 5 | 385 | 192.50 |
| 25. | விருதுநகர் | 6 | 462 | 231.00 |
| 26. | சிவகங்கை | 5 | 385 | 192.50 |
| 27. | தூத்துக்குடி | 7 | 539 | 269.50 |
| 28. | திருநெல்வேலி | 11 | 847 | 423.50 |
| 29. | கன்னியாகுமரி | 7 | 539 | 269.50 |
|  | மொத்தம் | 235 | 18095 | 9047.50 |

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்

## இணைப்பு–II

(அரசாணை(நிலை) எண்.138, ஊரக வளர்ச்சித்(மதி1) துறை, நாள்.25.05.2000) திருத்திய பட்டியல்.

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் (2000–2001) கீழ் தேர்வு செய்யக்கூடாத பணிகள்.

1. மத்திய, மாநில அரசுகளின் அலுவலகங்களுக்கும், அரசுத் துறைகள், முகமைகள், நிறுவனங்கள் ஆகியவற்றின் அலுவலகங்களுக்கும் பணியாளர் குடியிருப்புகளுக்கும் கட்டிடம் கட்டுதல்.
2. வணிக நிறுவனங்கள், அறநிறுவனங்கள், பதிவு பெற்ற சங்கங்கள், தனியார் நிறுவனங்கள், கூட்டுறவு நிறுவனங்கள் ஆகியவை தொடர்பான வேலைகள் செய்தல்.
3. நீண்டகாலம் பயன்படும் சொத்துக்களை புதுப்பித்தல், தர மேம்பாடு செய்தல் முதலியவைகளுக்கான சிறப்பு பழுது பார்த்தல் பணிநீங்கலாக மற்ற பொது பழுது பார்ப்புப் பணிகளையும் நிர்வாக பணிகளையும் மேற்கொள்ளல்.
4. மானியங்களும், கடன்களும் வழங்குதல்.
5. நினைவுச் சின்னங்களும், நினைவு மண்டபங்களும் கட்டுதல்.
6. இருப்பு செய்யத்தக்க எந்தவிதமான பொருட்களையும் வாங்குதல்.
7. நில எடுப்புக்கும், நில எடுப்புக்கு இழப்பீடு வழங்குவதற்கும் செலவிடல்.
8. அனுமதி அளிக்கப்பட்ட திட்டங்களின் ஒரு பகுதியாக அமைவது நீங்கலாக தனிப்பட்ட ஒருவருக்கு ஆதாயம் அளிக்கக் கூடிய சொத்துக்களுக்கு செலவிடல்.
9. மத வழிபாட்டு இடங்களுக்குச் செலவிடல்.
10. பேருந்து நிழற்குடை
11. சமுதாயக்கூடம்.
12. கலையரங்கம் / நாடகமேடை
13. கான்கிரீட் சாக்கடைகள் (Road Side Concrete Drains)

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்